மிச்சமாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இன்னும் இரண்டு கப்பல்கள் அனுமதிக்கப்படுமானால், ஏறத்தாழ $14\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒரு ஆண்டிற்கு மிச்சமாகும் வாய்ப்பு இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு தேவையான கப்பல்கள் மூன்று. இப்போது மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்துள்ளது ஒரே ஒரு கப்பல்தான். 6 கப்பல்களில் வாடகை கொடுத்துக்கொண்டு, நிலக்கரி எடுத்துக் கொண்டு வருகிறோம். எனவே, குறைந்தது 10 கப்பல்கள் வேண்டுமென்று கேட்டால்தான், மத்திய அரசு நமக்கு 3 அல்லது 5 கப்பல்கள் கொடுப்பார்கள். எனவே, 10 கப்பல்கள் வேண்டு மென்று கேட்பதற்கு மத்திய அரசாங்கத்தோடு போராட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் யோசனைப்படி நடந்தால், ஒரு கப்பல்கூட வாங்க அனுமதி கிடைக்காது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நாம் இப்போது ஜப்பானிலிருந்து கப்பலை வாங்குவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த கப்பல் வந்தபிறகு, அது சரியாக ஓடுமா, எத்தனை ஆண்டுகள் வரை பழுதில்லாமல் ஓடும் என்பதற்கான கியாரண்டி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? ஏற்கனவே வாங்கப்பட்ட கப்பல் சரியாக ஓடாததினால், அதனை நாம் நஷ்டத்திற்கு விற்றிருக்கிறோம். அந்த கியாரண்டியை வாங்குவதற்கு ஏதேனும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நாம் முதலிலே வாங்கியது பழைய கப்பல் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். இப்போது அரசாங்கம் புதிய கப்பலை வாங்கயிருக்கிறது. அப்படி பழைய கப்பலை வாங்கிவிட்ட காரணத்தினால்தான், நஷ்டம் ஏற்பட்டது என்று அவர்கள் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். புதிய கப்பலை வாங்குகின்றபோது, நிச்சயமாக அதற்கு கியாரண்டி கொடுப்பார்கள். இப்போது எத்தனை ஆண்டுகள் கியாரண்டி என்பதற்கான குறிப்பு என்னிடத்தில் இல்லை. அதற்கான கியாரண்டி நிச்சயமாக உண்டு.

சென்னை—மதுரை இடையே தூங்கும் வசதிகொண்ட சொகுசுப் பேருந்துப்பணி.

(70 * வினா எண். 19347)—திரு ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984 பிப்ரவரி 18]

தூங்கும் வசதி கொண்ட சொகுசு பஸ்ஸை சென்னையில் இருந்து மதுரைக்கு விட அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இதை விரிவாக்கலாமா என பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பரிசீலித்த பின்பு மதுரைக்கு விடுவது குறித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை என்பது தென் தமிழ்நாட்டில் முக்கியமான ஒரு சுற்றுலா நகரம். அப்படி ஒரு பேருந்தை அங்கே விடுகிறபோது, அதை கன்னியாகுமரிக்கும் நீட்டிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மதுரை மிக முக்கியமான நகரம்தான். அதனால்தான், நான் ஏற்கனவே அது பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னேன். கன்னியாகுமரிக்கு மேலும் நீட்டிக்க வேண்டுமென்று கேட்காமல் இருந்ததற்கு நன்றி. கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு வருவதென்று சொன்னால், அதிக நேரமாகும். இரவு 8 மணிக்கு புறப்பட்டு, காலை 5 மணிக்கு வரக்கூடிய அளவுக்கு தூங்குவதற்கான வசதி அதிலே செய்யப்பட்டிருக்கிறது. அதிலே அமர்ந்து கொண்டு வருவது என்று சொன்னால், கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். எனவே, அந்த நேரத்திற்குள் சென்னையிலிருந்து புறப்பட்டால், எந்த இடத்திற்குப் போக முடியுமோ, அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும்.

(முற்பகல் 9-40)

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவரவர்களே, தூங்கும் வசதி கொண்ட அந்த பஸ்ஸை கன்னியாகுமரிக்கு விடமுடியாத காரணத்தை அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்னுடைய கேள்வி என்னவென்றால், சொகுசு பஸ்ஸிலே உட்காருவதற்கும், தூங்குவதற்கும், மடிப்புகள் கொண்ட அமைப்பை செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்தால் அங்கே உட்காருவதற்கும் முடியாது, நிம்மதியாகத் தூங்கவும் முடியாது. ஏதாவது ஒன்றைத்தான் செய்ய முடியும். அந்த அளவிற்குத் தான் அங்கே வசதியிருக்கிறது. கன்னியாகுமரிக்கு விடமுடியாது என்று சொல்லவில்லை. அதைப் பார்த்துப் பின்னால் செய்யலாம் என்று தான் சொல்கிறேன். அதையே உத்தரவாதமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி நகரில் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் சமூகநலக் கூடம் கட்டும் திட்டம்.

*(71 * வினா எண் 18909)*—**திரு. எஸ். இளையபெருமாள் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS